**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.02/2024**

**Prosecution Witness**

**Name** :திரு. பவித்திரன்
**Father's/Spouse's Name** :திரு. மோகன்
**Address** :**1/128** பெரியதெரு, பொன்னூர், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்
**Calling** :பழைய வாகனங்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில்
**Religion** :இந்து
**Age** :24

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 08.05.2024.**

**Signature of witness,**

**(A1 , A2 are present.)**

**CC.No.02/2024** **PW :9 (LW-10)** **08.05.2024**

முதல் விசாரணை

நான் 1/128 பெரியதெரு, பொன்னூர், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து பழைய வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.8 ஜெயமூர்த்தியை அவர் ஆன்மீக சொற்பொழிவு செய்வதாலும், அதில் எனக்கு நாட்டம் இருப்பதாலும் எனக்கு தெரியும். நான் அவரிடமிருந்து TN 01 AF 1933 என்ற டாட்டா இன்டிகா வாகனத்தினை வாங்கினேன். அந்த வாகனம் ஒரு விபத்திற்குட்பட்டு முன்பகுதி சேதமாகி இருந்தது. அந்த வாகனத்தை பகுதியாக பிரித்து இரும்பு கடைக்கு போட்டுவிட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஜெயமூர்த்தி தான் அந்த காரை விற்க என்னிடம் கேட்டார். நான் காரை வாங்கிய போது அந்த காரில் அசல் பதிவு சான்று இல்லை. ஒளிப்பட நகல் தான் இருந்தது. அந்த பதிவு சான்றில் உரிமையாளர் யார் பெயர் இருந்தது என்று தற்போது எனக்கு நினைவில்லை. போலீசார் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்கள். நேரில் விசாரிக்கவில்லை. என்னை தொலைபேசியில் இந்த ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதத்தில் விசாரித்தார்கள். அதற்கு முன்பு விசாரிக்கவில்லை. தண்டபாணி என்ற உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**மறு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.02/2024**

**Prosecution Witness**

**Name** :திரு. ஜெயமூர்த்தி
**Father's/Spouse's Name** :திரு. கோதண்டபாணி
**Address** :மேட்டுத்தெரு, கொங்கரை, மாம்பட்டு கிராமம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்
**Calling** :ஆன்மீக சொற்பொழிவு செய்யும் பணி
**Religion** :இந்து
**Age** :61

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 08.05.2024.**

**Signature of witness,**

**(A1 , A2 are present.)**

**CC.No.02/2024** **PW :8 (LW-9)** **08.05.2024**

முதல் விசாரணை

நான் மேட்டுத்தெரு, கொங்கரை, மாம்பட்டு கிராமம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து ஆன்மீக சொற்பொழிவு செய்யும் பணி செய்து வருகிறேன். 1ம் எதிரி நீலகண்டன் எனது சொற்பொழிவை கேட்டு தொலைபேசியில் என்னிடம் பேசியுள்ளார். நான் டாட்டா இன்டிகா கார் ஒன்று வைத்துள்ளேன். அந்த கார் நான் வாங்கியதாகும். நான் அந்த காரை ஒரு நண்பரிடம் வாங்கினேன். நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் அந்த நண்பரின் பெயர் எனக்கு நினைவில்லை. அந்த வாகனத்தை பவித்திரன் என்பவரிடம் நான் விற்றுவிட்டேன். 4,5 ஆண்டுகளுக்கு முன்பு அந்த காரை எனது நண்பரிடம் வாங்கினேன். அவரது முகவரி எனக்கு நினைவில்லை. அந்த காரை பவித்திரன் உடைத்து விற்றுவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது. சாட்சியின் சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்து சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

நான் ஆன்மீக சொற்பொழிவை ஞாபகத்தில் உள்ளவை தொடர்பாகவும் குறிப்புகள் எடுத்தும் செய்வேன். நான்கு வருடங்களுக்கு முன்பு நண்பரிடமிருந்து காரை வாங்கியது தொடர்பாக அவரது பெயரும், அவரது முகவரியும், அவர் எந்த பகுதியை சேர்ந்தவர் என்றும் எனக்கு நினைவில்லை என்று நான் கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த இன்டிகா காரை பயன்படுத்திய போது ஒரு விபத்து ஏற்பட்டு வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த காரின் மதிப்பிற்குரிய தொகையை கொடுத்துத்தான் காரை வாங்கினேன். எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. பொதுவாக வாகனங்களை விலை பேசி வாங்கும் போது அதன் உரிமைக்கான பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும் ஆனால் நான் அதுபோன்று செய்யவில்லை. நான் வாங்கிய வாகனம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அப்போது பார்த்தேன். ஆனால் தற்போது எனக்கு நினைவில்லை. அந்த வாகனத்தின் பதிவு நீலகண்டன் பெயரில் இருக்க வாய்ப்புள்ளது என்றால் அவ்வாறு இருக்க வாய்ப்பில்லை. டாட்டா இன்டிகா TN 01 AE 1933 பதிவெண் கொண்ட வாகனம் எனக்கு நீலகண்டனால் பரிசாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அவ்வாறு நீலகண்டன் போலீசாரிடம் கூறியதாக போலீசார் என்னிடம் கூறினார்கள். அவ்வாறு பரிசாக பெற எனக்கு விருப்பமில்லை என்பதால் நான் ரூ.50,000 கொடுத்து அந்த காரை பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் அவ்வாறு நீலகண்டன் சொன்னதாக போலீசார் என்னிடம் சொன்னார்கள். நான் அந்த காரை 14.03.2020 அன்று தான் நீலகண்டனிடமிருந்து பெற்றேன் என்றும், மிக குறுகிய காலத்தில் யாரிடமிருந்து பெற்றேன் என்று நினைவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீலகண்டன் என்னிடம் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.